**முதன்மைமீள்கொள்வனவு உடன்படிக்கை**

இவ் உடன்படிக்கையானது அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர் ஒருவரான இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட (பதிவு இலக்கம் பீபி 795) அத்துடன் முதலாம் மாடி, தேசிய சேமிப்பு வங்கி, தலைமை அலுவலகம், இலக்கம் 400, காலி வீதி, கொழும்பு 03, இலங்கையில் அதன் பதிவு செய்யப்பட்ட முகவரியினை கொண்டுள்ள என்எஸ்பி பன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிடட் (இதனகத்துப் பின்னர் ‘‘வணிகர்’’ என குறிப்பீடு செய்யப்படும், என்பதுடன் இது அதன் பின்னுரிமையாளரையும் சாட்டுதல் பெறுநர்களையும் உள்ளடக்குதல் வேண்டும்) இற்கும்……………………..…………………………………………………………………..

என்ற முகவரியைச் சேர்ந்த………………………………………………………………….. (தேசிய அடையாள அட்டை இலக்கம்)……………………………………………(இதனகத்துப் பின்னர் ‘‘வாடிக்கையாளர்’’ என குறிப்பீடு செய்யப்படும், என்பதுடன் இது அதன் பின்னுரிமையாளரையும் சாட்டுதல் பெறுநர்களையும் உள்ளடக்குதல் வேண்டும்) இற்கும் இடையில் ……………………………………………ஆம் நாளன்று கைச்சாத்திடப்பட்டது.

ஒவ்வொன்றும் ஒரு ‘‘தரப்பினர்’’ என்பதுடன் கூட்டாக ‘‘தரப்பினர்கள்’’

1. பொருள்கோடல்

இவ் உடன்படிக்கை நோக்கத்திற்காக, பின்வரும் வரைவிலக்கனம் செய்யப்பட்ட சொற்பதங்கள் பின்வரும் கருத்துக்களை கொண்டிருக்கும்.

‘‘**செலுத்த வேண்டிய திகதி**’’என்பது இவ் உடன்படிக்கையின் நியதிகளுக்கு அமைவாக அத்தகைய முடிவுறுத்தல் அறிவுறுத்தலினை ஒப்படைத்ததன் விளைவாக அனைத்து கொடுக்கல்வாங்கல்களினதும் மீள்கொள்வனவுத் திகதி இடம்பெறுதல் வேண்டுமெனற் திகதியாகவிருக்கின்ற முடிவுறுத்தல் அறிவித்தலில் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட திகதியென்று பொருளாகும்.

‘‘**கடன்தீர்க்க வகையற்ற நிலைச் செயல்**’’என்பது தரப்பினர் ஒருவர் தொடர்பில் (i) சாதாரண தொழில் நடவடிக்கையின் போது அவை நிலுவையாக வருகின்ற போது அதன் படுகடன்களை கொடுப்பனவு செய்ய தரப்பினர் முடியாதிருக்கின்றமை; (ii) தரப்பினரின் அல்லது தரப்பினர் ஆதனத்தின் ஏதேனும் முக்கிய பாகத்தின் எவரேனும் நம்பிக்கை பொறுப்பாளரை,உரிமைத்தத்துவக்காரரை, பொறுப்பேற்பவரை, ஒழித்துக்கட்டுப்பவரை அல்லது அதற்கு சமமான ஒருவரை நியமிக்க உடன்படுகின்ற அல்லது உடன்பாட்டை தெரிவிக்க நாடுகின்றமை,அல்லது (iii) வங்குரோத்து, ஒடுக்குதல் அல்லது வேறு ஏதேனும் கடன்தீர்க்க வகையற்ற நிலைஅல்லது ஏதேனும் ஒத்த நடவடிக்கைமுறைக்காக அல்லது சார்த்துகின்ற மனுவொன்றினை ஏதேனும் நீதி மன்றத்தில் அல்லது முகவராண்மையின் முன் தரப்பினர் தொடர்பில் முன்னிலைப்படுத்தி அல்லது கோவைப்படுத்தி அதன் கோவைப்படுத்தலின் 30 நாட்களினுள் தடைக்கட்டளை விதிக்கப்படாமை அல்லது தள்ளுபடி செய்யப்படாமைஎன்பது பொருளாகும்;

‘’**உடன்படிக்கை**’’என்பது அதன் பாகத்தினை தோற்றுவிக்கின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல்களுடனும் சேர்த்து இம் முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கை என்பது பொருளாகும்;

“**திருத்தப்பட்ட மீள் கொள்வனவு விலை**”என்பது இதற்கான 7 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்ட பொருளினை கொண்டிருத்தல் வேண்டும்.

“**தொழில் நாள்**”என்பது பொதுவான தொழிலுக்காக வணிகர் திறந்துள்ள ஒரு நாள் என்பது பொருளாகும்;

“**மத்திய வைப்பக முறைமை கணக்கு**”என்பது ஏற்புடைய தகைமையுடைய பிணையங்களை வைத்திருக்கின்ற அல்லது பொருத்தமானவாறு, வைத்திருக்கப்படவுள்ள அரசாங்கப் பிணையங்களுக்கான மத்திய வைப்பக முறைமையுடனான ‘‘(லங்காசெக்கியோ)’’ வாடிக்கையாளர் கணக்கு என்பது பொருளாகும்;

**"உறுதிப்படுத்தல்"**இதற்கான இணைப்பு 1 ஆக தோன்றுகின்ற படிவத்தில் வணிகரால் உறுதியாக வழங்கப்படுகின்ற உறுதிப்படுத்தல் ஒன்று என்பது பொருளாகும்;

**"தவணை தவறுதல் வீதம்"**என்பது இலங்கை வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்படும் வீதத்துடன் சேரத்து ஆண்டுக்கு 2% என்பது பொருளாகும்.

**"தகைகமையுடைய பிணையம்"**என்பது இந் நோக்கங்களுக்காக வணிகர், காலத்திற்கு காலம் வாடிக்கையாளருக்கு அறிவிக்கக்கூடிய இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் ஏதேனும் உண்டியல், குறிப்பு அல்லது முறி அத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்படும் ஏதேனும் வேறு வகையான பிணையம் தகைமையுடைய பிணையம் ஒன்றை உள்ளடக்கும் என்பது பொருளாகும் :

**"சமமான பிணையங்கள்"** என்பது இதற்கான 6ஆம் வாசகத்தின் நியதிகளுக்கு அமைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களில் பதிலீடொன்று காணப்படுகின்ற ஏதேனும் சூழ்நிலை தொடர்பில், கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களைப் போன்று அதே வகையான,பெயரளவான பெறுமதி, விவரணம் மற்றும் தொகை கொண்ட பிணையங்கள் என்பது பொருளாகும்.

**"உச்சம்"**தகைமையுடைய பிணையங்கள் தொடர்பில் தரப்பினர்களுக்கிடையில் இணங்கியவாறு அல்லது வணிகர் ஒருவருக்கும் அல்லது வாடிக்கையாளர் ஒருவருக்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல் ஒன்றின் நிகழ்வில் சந்தைப் பெறுமதிக்கான கழிவொன்று என்பது பொருளாகும், வணிகரால் நல்லெண்ணத்தில் உச்சமொன்று நிர்ணயிக்கப்படுகின்றது.

**"வருமானம்"**என்பது கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பில் வழங்குநரால் அதன் மீது மேற்கொள்ளப்படும் எவையேனும் நறுக்குகள், வட்டி, பங்கிலாபங்கள்,மற்றும் ஏதேனும் வேறு கொடுப்பனவுகள் (முதன்மை தொகை தொடர்பிலான ஏதேனும் கொடுப்பனவு தவிர)

**"ரூபா"**இலங்கை ரூபா என்பது பொருளாகும்.

**"சந்தைப் பெறுமதி"**என்பது எவையேனும் பிணையங்கள் தொடர்பில், சந்தையில் நிலவுகின்ற அல்லது அத்தகைய பெறுமதி கிடைக்கப்பெறாத சந்தரப்பங்களில்,உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவையான அத்தகைய முறைக்கமைய நிர்ணயிக்கப்பட்டவாறானஅத்தகயை பிணையங்களின் பெறுமதி என்பதுபொருளாகும்.

**"தவணை தவறுதல் அறிவித்தல்"**என்பது தவணை தவறுதல் நிகழ்வொன்று இடம்பெறுதலின் போது தவணை தவறாத தரப்பினர் மூலம் தவணை தவறிய தரப்பினருக்கான அறிவித்தலொன்று, அத்தகைய அறிவித்தலானது ஏற்புடைய செலுத்த வேண்டிய திகதி மற்றும் முடிவுறுத்தல் கொடுப்பனவுத் திகதி ஆகியவற்றைகுறிப்படுகின்றது என்பது பொருளாகும்.

**"முடிவுறுத்தல் நிகழ்வு அறிவித்தல்"**முடிவுறுத்தல் நிகழ்வு என்பது முடிவுறுத்தல் நிகழ்வொன்று இடம்பெறுதலின் போது தவணைதவறாத தரப்பினர் மூலம் தவணை தவறிய தரப்பினருக்கான அறிவித்தலொன்று, அத்தகைய அறிவித்தலானது ஏற்புடைய செலுத்த வேண்டிய திகதி மற்றும் முடிவுறுத்தல் கொடுப்பனவு திகதி ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றது என்பது பொருளாகும்.

**"கொள்வனவுத் திகதி"**என்பது தொடர்புடையஉறுதிப்படுத்தலில் உள்ளவாறான குறித்துரைக்கப்பட்ட திகதி என்பது பொருளாகும்.

**"கொள்வனவு விலை"** என்பது தொடர்புடைய உறுதிப்படுத்தலில் உள்ளவாறான குறித்துரைக்கப்பட்ட விலை என்பது பொருளாகும்.

**"கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்"**என்பது தொடர்புடைய உறுதிப்படுத்தலில் உள்ளவாறு குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் என்பது பொருளாகும் என்பதுடன் இதற்கான 6 ஆம் வாசகத்தின் நியதிகளுக்கு அமைய எவையேனும் பதிலீடு செய்யப்பட்ட தகைமையுடைய பிணையங்களை உள்ளடக்குவதாக கொள்ளப்படல் வேண்டும்.

**"மீள்கொள்வனவுத் திகதி"** என்பது தொடர்புடைய உறுதிப்படுத்தலில் உள்ளவாறான குறித்துரைக்கப்பட்ட திகதி என்பது பொருளாகும்.

**"மீள்கொள்வனவுத் விலை"** என்பது தொடர்புடைய உறுதிப்படுத்தலில் உள்ளவாறான குறித்துரைக்கப்பட்ட விலை என்பது பொருளாகும்.

"**மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்"**என்பது ஏற்புடைய உறுதிப்படுத்தலில் நிர்ணயிக்கப்பட்டவாறு இதற்கான நியதிகளுக்கு உட்பட்டு இணங்கிய திகதியன்று ("**கொள்வனவுத் திகதி")** இணங்கிய விலையொன்றில் **("கொள்வனவு விலை")** தகைமையுடைய பிணையங்களை **("கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்")** வாடிக்கையாளருக்கு விற்பனை செய்வதற்கு வணிகர் இணங்குவதன் ஊடாக அத்துடன் இணங்கிய திகதியொன்றில் **("மீள்கொள்வனவுத் திகதி")** இணங்கிய விலையொன்றிற்காக **("மீள்கொள்வனவு விலை")** கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வணிகர்கருக்கு விற்பனை செய்வதற்கு வாடிக்கையாளர் சமகாலத்தில் இணங்குவதனூடான கொடுக்கல் வாங்கலொன்று என்பது பொருளாகும்.

**"நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்"**என்பது ஏற்புடைய உறுதிப்படுத்தலில் நிர்ணயிக்கப்பட்டவாறு இதற்கான நியதிகளுக்குட்பட்டு ஏற்புடைய கொள்வனவுத் திகதியன்று ஏற்புடைய கொள்வனவு விலையில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வணிகருக்கு விற்பனை செய்வதற்கு வாடிக்கையாளர் இணங்குவதுடன் அத்துடன் ஏற்புடைய மீள்கொள்வனவு விலைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளருக்கு விற்பனை செய்ய வணிகர் சமகாலத்தில் உடன்படுவதல் மூலமான கொடுக்கல் வாங்கலொன்று என்பது பொருளாகும்.

"**இலங்கை வங்கிகளுக்கு முன்வைக்கப்படும் வீதம்"**என்பது ஏற்புடைய தினத்தன்று மு.ப 11 மணியிலிருந்து ரொய்டர் திரையில் "SLIBOR" பக்கத்தில் தோன்றுகின்றவாறு ஒரு மாத காலப்பகுதிக்கான வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச் சந்தையொன்றில் முன்வைக்கப்படும் வீதமாக இருக்கின்ற இலங்கை வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீதம் என்பது பொருளாகும்.

"**முடிவுறுத்தல் அறிவுறுத்தல்"**என்பது இதற்கான 7(iii) வாசகத்தினை பின்பற்றி வழங்கப்படுகின்ற அறிவித்தல் என்பது பொருளாகும்.

"**முடிவுறுத்தல் கொடுப்பனவுத் திகதி"**என்பது முடிவுறுத்தல் அறிவித்தலில் எடுத்துரைக்கப்பட்டவாறு இதற்கான 07 ஆம் பிரிவின் கீழ் (இதற்கான நியதிகளுக்குட்பட்டு) ஏற்புடைய செலுத்தத்தக்க தொகைமீதான திகதி என்பது பொருளாகும்.

**"கொடுக்கல்வாங்கல்"**என்பது மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒன்று அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒன்று என்பது பொருளாகும்.

இதற்கு மேலதிகமாக இவ் உடன்படிக்கையில் சூழ்நிலை வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி :

அ. பிரிவுத் தலைப்புகள்,தொடர்புக்காக உற்சேர்க்கப்பட்டுள்ளதுடன், இவ் உடன்படிக்கையின் பொருள்கோடலை பாதிக்கலாகாது

ஆ. பிரிவுகளுக்கானதொடர்பு, இவ் உடன்படிக்கையின் பிரிவுகளுக்கான தொடர்புகளாக பொருள் கொள்ளப்படுவதற்காகும்.

இ. ஒருமையினை குறித்து நிற்கும் பதங்கள் பன்மையினையும் மற்றும் இதற்கு நேர்மாறானதையும் உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன், ஆண் பாலினை குறித்து நிற்கும் பதங்கள் பெண் பாலினையும் ஆண் பெண் வேறுபாடற்ற பாலிணையும் இதற்கு நேர் மாறானதையும் உள்ளடக்குதல் வேண்டும்;அத்துடன்

ஈ. சட்டவாக்கமொன்றிற்கு அல்லது துணைச் சட்டவாக்கமொன்றிகான ஏதேனும் தொடர்பானது காலத்திற்கு காலம் திருத்தப்பட்ட, மீள் சட்டமாக்கப்பட்ட அல்லது பதிலீடு செய்யப்பட்டவாறான

அச் சட்டவாக்கத்திற்கு அல்லது துணைச் சட்ட வாக்கத்திற்கான தொடர்பாக இருக்கும் என கொள்ளப்படுதல் வேண்டும்.

2. மீள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்

(i) தரப்பினர்கள் கொடுக்கல்வாங்கலினை பொறுப்பேற்கின்ற விடத்து, ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலிற்கும் நியதிகளை நிர்ணயிக்கின்ற உறுதிப்படுத்தலொன்றினை வணிகர் வழங்குதல் வேண்டும்.

(ii) தரப்பினர்களுக்கு இடையில் பொறுப்பேற்கப்பட்டுள்ள எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள், (வேறு வகையில் வெளிப்படையாக இணங்கினாலன்றி) இம் முதன்மை மீள் கொளவனவு உடன்படிக்கைக்கு உட்பட்டிருத்தல், அதன் பாகமொன்றினை தோற்றுவித்தல், மற்றும் அதன் மூலம் ஆளப்படுதல் வேண்டும் இதன்பயனாக ஒவ்வொரு அத்தகைய கொடுக்கல் வாங்கலிற்குமான அனைத்து உறுதிப்படுத்தல்களும் அத்துடன் இவ் முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையும் ஒன்றாகச் சேர்ந்து தனியொரு உடன்படிக்கையினை அமைத்தல் வேண்டும்.

(iii) 7ஆம் பிரிவிற்குட்பட்டு:

அ. ஒவ்வொரு மீள்கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலும்:

(அ) கொள்வனவுத் திகதியன்று, வணிகர், கொள்வனவு விலை பெறுகைக்குட்பட்டு (வணிகருடன் வாடிக்கையாளர் கணக்கொன்றினை வைத்திருக்கும் சந்தர்பத்தில் வணிகருடனான வாடிக்கையாளரின் காசுக் கணக்கில் இருந்து வணிகர் பற்று வைக்கலாம்), ஏற்புடைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் மத்திய வைப்பக கணக்கிற்கு வரவு வைத்தல் அல்லது ஏற்புடைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் மத்திய வைப்பக முறைக்கு மாற்றல்செய்தல் வேண்டும்.

(ஆ) மீள் கொள்வனவுத் திகதியன்று, வணிகர்,ஏற்புடைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் மத்திய வைப்பக கணக்கு முறையில் பற்று வைத்தல் அல்லது ஏற்புடைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் மத்திய வைப்பக முறைமை கணக்கிலிருந்தான மாற்றலொன்றை பெற்று கொள்வனவு விலையினை வணிகர் உடனான வாடிக்கையாளரின் காசுக் கணக்கிற்கு அல்லது இந் நோக்கங்களுக்காக வாடிக்கையாளரினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஏனைய கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும் அல்லது வாடிக்கையாளருடன் இணங்கக்கூடியவாறு அத்தகைய வேறு விதத்தில் கொடுப்பனவினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(இ) கொள்வனவுத் திகதியன்று கொள்வனவு விலைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளருக்கு வணிகர் மூலமான விற்பனையினை ஈடுபடுத்துகின்ற ஒவ்வொரு மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கலும் அத்துடன் மீள்கொள்வனவு விலைக்காக மீள் கொள்வனவுத் திகதியன்று கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரிடமிருந்து வணிகர் மூலமான கொள்வனவு, அத்துடன் (சந்தேகத்தை தவிர்பதற்காக) அத்தகைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களில் உள்ள ஒட்டுமொத்த சட்ட ரீதியான மற்றும் பயன்பெறு நலன்கள்,கொள்வனவுத் திகதியன்று வாடிக்கையாளருக்கு அத்துடன் மீள்கொள்வனவுத் திகதியன்று வணிகருக்கு முறையாக உரித்தளிக்கப்படுதல் வேண்டும் என வெளிப்படையாக இணங்கி ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

ஆ. ஒவ்வொரு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலும்

(அ) கொள்வனவுத் திகதியன்று, வணிகர், ஏற்புடைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் மத்திய வைப்பக கணக்கு முறைமையில் பற்று வைத்தல் அல்லது ஏற்புடைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் மத்திய வைப்பக முறைமை கணக்கிலிருந்தான மாற்றலொன்றை பெற்று கொள்வனவு விலையினை வணிகர் உடனான வாடிக்கையாளரின் காசுக் கணக்கிற்கு அல்லது இந் நோக்கங்களுக்காக வாடிக்கையாளரினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஏனைய கணக்கிற்கு வரவு

வைத்தல் வேண்டும் அல்லது வாடிக்கையாளருடன் இணங்கக்கூடியவாறு அத்தகைய வேறு விதத்தில் கொடுப்பனவினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) மீள் கொள்வனவுத் திகதியன்று, வணிகர்,வாடிக்கையாளரிடமிருந்து மீள்கொள்வனவு விலை பெறுகைக்குட்பட்டு (வணிகருடன் வாடிக்கையாளர் கணக்கொன்றினை வைத்திருக்கும் சந்தர்பத்தில் வணிகருடனான வாடிக்கையாளரின் காசுக் கணக்கில் இருந்து வணிகர் பற்று வைக்கலாம்), ஏற்புடைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் மத்திய வைப்பக கணக்கிற்கு வரவு வைத்தல் அல்லது ஏற்புடைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் மத்திய வைப்பக முறைக்கு மாற்றல் வேண்டும்.

(இ) கொள்வனவுத் திகதியன்று கொள்வனவு விலைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வணிகருக்கு வாடிக்கையாளர் மூலமான விற்பனையினை ஈடுபடுத்துகின்ற ஒவ்வொரு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கலும் அத்துடன் மீள்கொள்வனவு விலைக்காக மீள் கொள்வனவுத் திகதியன்று கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரிடமிருந்து வணிகர் மூலமான கொள்வனவு, அத்துடன் (சந்தேகத்தை தவிர்பதற்காக) அத்தகைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களில் உள்ள ஒட்டுமொத்த சட்ட ரீதியான மற்றும் பயன்பெறு நலன்கள் கொள்வனவுத் திகதியன்று வணிகருக்கு அத்துடன் மீள்கொள்வனவுத் திகதியன்று வாடிக்கையாளருக்கு முறையாக உரித்தளிக்கப்படுதல் வேண்டும் என வெளிப்படையாக இணங்கி ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

IV உறுதிப்படுத்தலானது வேறு வகையில் ஏற்பாடுசெய்தாலன்றி மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒன்றில் வாடிக்கையாளருக்கோ அன்றில் நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒன்றில் வணிகரோகொள்வனவுத் திகதியில் இருந்து மீள்கொள்வனவுத் திகதிக்கு கொள்வனவுப் பிணையங்களை நிறைவாக்குவதற்காக அல்லது அகற்றுவதற்கு அழைப்பு விடுப்பதற்கு உரித்துடையவராகவிருத்தல் வேண்டும்.

3. வருமானம்

கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பில் ஏதேனும் வருமானக் கொடுப்பனவு **("வருமானக் கொடுப்பனவு")** வழங்குனரால் மேற்கொள்ளப்படுமெனில் :

(i) அவை,கொள்வனவுத் திகதியின் பின்னர் அத்துடன் மீள்கொள்வனவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒன்றில் விடயக் கருமமாக, அத்தகைய தொகையானது வணிகரின் நலனுக்கு சேருதல் வேண்டும் இது, (சந்தேகத்தை தவிர்ப்பதற்காக) அத்தகைய தொகைக்கு முற்றிலும்உரித்துடையதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வருமானம் வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு செய்யப்படுமெனில் வாடிக்கையாளர்,அதன் பெறுகைக்கு ஏற்ப அதே தொழில் நாளன்று அவ்வாறு வணிகருக்கு கிடைக்கப்பெற்ற தொகைக்கு சமமான தொகையொன்றை கொடுப்பனவு செய்தல் வேண்டும்; அத்துடன்

(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கலின் கீழ், கொள்வனவுத் திகதியின் பின்னர் அத்துடன் மீள்கொள்வனவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில் அத்தகைய தொகையானது வாடிக்கையாளரின் நலனுக்குசேருதல் வேண்டும், அத்துடன் அத்தகைய வருமானக் கொடுப்பனவு வணிகருக்கு கொடுப்பனவு செய்யுமிடத்து, வணிகர்,அதன் பெறுகையாக அதே தொழில் நாளன்று அவ்வாறு வாடிக்கையாளருக்கு கிடைக்கப்பெற்ற தொகைக்கு சமமான தொகையொன்றினைக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

4. பிரதிநிதித்துவங்கள்

(1) வாடிக்கையாளர், பின்வருமாறு வணிகருக்கு பிரதிநிதித்துவம் செய்கின்றார் (இப் பிரதிநிதித்துவங்கள் கொடுக்கல்வாங்கல் ஒன்றில் வாடிக்கையாளர் பொறுப்பேற்கின்ற ஒவ்வொரு நாளன்றும் வாடிக்கையாளரினால் திரும்ப திரும்ப செய்யப்படுவதாக கொள்ளப்படுதல் வேண்டும்)

(i) இவ் ஒப்பந்தத்தில் அத்துடன் ஏற்புடைய உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள் மீது ஒப்பந்தத்தின் அத்துடன் இதன் கீழான கொடுக்கல் வாங்கலின் கீழ் அதன் கடப்பாடுகளை பொறுப்பேற்பதற்கும் செயலாற்றுவதற்கும் வாடிக்கையாளர் முழுமையான தத்துவ கொள்ளவினையும் அதிகாரத்தையும் கொண்டுள்ளார் என்பதனையும் ஏதேனும் அல்லது அனைத்து அவசியமான அங்கீகாரமளித்தல்களையும் சம்மதங்களையும் பெற்றுள்ளார்;

(ii) வாடிக்கையாளர்,இவ் ஒப்பந்தத்தினை அத்துடன் இதன் கீழான அத்தகைய கொடுக்கல் வாங்கலினை முதன்மையாளராக பொறுப்பேற்கின்றார்.

(iii) வாடிக்கையாளர், இவ் ஒப்பந்தத்தின் கீழ் எவையேனும் கொடுக்கல்வாங்கலின் கீழ் வணிகரால் கொடுப்பனவு செய்யப்படும் அனைத்து தொகைகளினதும் தனியுரித்துள்ள பயன்பெறும் சொந்தக்காரர் ஆவார்.

(iv) கொடுக்கல் வாங்கல்களினை பெறுப்பேற்பதன் வரி மற்றும் கணக்கீட்டு உள்ளார்ந்தங்கள், அத்துடன் சாத்தியமான நிதியியல் நலன்கள் மற்றும் இடர்நேர்வுகள் வாடிக்கையாளரின் நிதியியல் சூழ்நிலையின் நோக்கில் பொருத்தப்பாடு என்பவற்றை மதிப்பிடுவதற்கு இயலுமாக இருப்பது பற்றி வாடிக்கையாளர் முழுமையாக அறிவிக்கப்பட்டள்ளார், போதிய அறிவினையும் அனுபவத்தினையும் கொண்டுள்ளார். (வணிகரிடமிருந்து இருந்து சுயாதீனமாக,வாடிக்கையாளர் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானதாக கருதுபடுகின்ற வாடிக்கையாளரின் சொந்த தீர்மானம், மதிப்பீடு அல்லது அத்தகைய தொழில்சார் ஆலோசனையின் அடிப்படையலமைந்த).

(v) கொடுக்கல்வாங்கல் அத்துடன் இவ் உடன்படிக்கை தொடர்பில் வாடிக்கையாளர்,வணிகரின் நோக்கின் மீது அல்லது ஆலோசனை மீது தங்கியிருக்கவில்லைஎன்பதுடன் வாடிக்கையாளரது சொந்த மதிப்பீட்டின் அடிப்படையில் (வாடிக்கையாளர் அவசியமானதென கருதுகின்றவாறு வாடிக்கையாளரின் தொழில்சார் ஆலோசகரிடமிருந்து அத்தகைய ஆலோசனையினை பெறுதல் உள்ளடங்களாக) வாடிக்கையாளர் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலினையும் பொறுப்பேற்பதற்கு வாடிக்கயைாளர் தீர்மானித்தள்ளார்; அத்துடன்

(vi) வாடிக்கையாளர், இதன் கீழான ஏதேனும் கொடுக்கல்வாங்கலிற்கு தரப்பினர் ஒருவர் ஆகுகின்ற வரி உள்ளார்ந்தங்களை மதிப்பிடுவதற்கு பொறுப்புடையவராக சுயமாக திருப்தியடைந்துள்ளார் அத்துடன் தொடர்ந்தும் பொறுப்பாக இருப்பார்.

(2) வணிகர், பின்வருமாறு வாடிக்கையாளரக்கு பிரதிநிதித்துவம் செய்கின்றார் (இப் பிரதிநிதித்துவங்கள் கொடுக்கல்வாங்கல் ஒன்றில் வணிகர் பொறுப்பேற்கின்ற ஒவ்வொரு நாளன்றும் வணிகரினால் திரும்ப திரும்ப செய்யப்படுவதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(i) இவ் ஒப்பந்தத்தில் அத்துடன் ஏற்புடைய உறுதிப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள் மீது ஒப்பந்தத்தின் அத்துடன் இதன் கீழான கொடுக்கல் வாங்கலின் கீழ் அதன் கடப்பாடுகளை பொறுப்பேற்பதற்கும் செயலாற்றுவதற்கும் வணிகர் முழுமையான தத்துவ கொள்ளவினையும் அதிகாரத்தையும் கொண்டுள்ளார் என்பதனையும் ஏதேனும் அல்லது அனைத்து அவசியமான அங்கீகாரமளித்தல்களையும் சம்மதங்களையும் பெற்றுள்ளார்.

(ii) வணிகரினால் பொறுப்பேற்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள், வணிகர் மூலமான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் செயற்பாட்டிலுள்ள ஏதேனும் முன்மதிமிக்க ஒழுக்க நெறிகளை அல்லது ஒழுங்குவிதிகளை மீறாது.

5. வரிகள்

வேறு வகையில் இணங்கினாலன்றி, இதன் கீழான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும்,வரிகளின் பிடித்துவைத்தல் அல்லது குறைப்பு, சட்டத்தினால் அல்லது ஏதேனும் வரி விதிப்பு அதிகாரியின் நடைமுறையினால் தேவைப்படுத்தப்பட்டாலன்றி,வரி விதிப்பதற்கு ஏதேனும் தத்துவத்தினையுடைய ஏதேனும்அதிகாரியினால் எவ்வகையிலானதுமான தன்மையில்

விதிக்கப்பட்ட, அறவிடப்பட்ட, சேகரிக்கப்பட்ட, பிடித்துவைக்கப்பட்ட அல்லது மதிப்பிடப்பட்ட எவையேனும் வரிகளும்அல்லது தீர்வைகளும் தடங்கலின்றியும் தெளிவாகவும் அத்துடன் பிடித்துவைத்தலின்றி அல்லது குறைத்தல் இன்றி கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில், கொடுப்பனவு செய்யும் தரப்பினர்,அத்தகைய ஏதேனும் கொடுப்பனவை முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடற்றவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பிடித்து வைத்தல் அல்லது குறைத்தலின் பின்னர் தேறிய தொகை பெறுகின்ற தரப்பினருக்கு செலுத்தப்படத்தக்கவையாக இருக்கும்.

6. பதிலீடு செய்தல்

(i) கொள்வனவுத் திகதி மற்றும் மீள் கொள்வனவுத் திகதி என்பனவற்றுக்கிடையில் ஏதேனும் நேரத்தில் ஏதேனும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வணிகர், தொடர்புடைய ஏதேனும் உறுதிப்படுத்தலுக்கமைவாக, ஏதேனும் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்காக வேறு பிணையங்களை பதிலீடு செய்யலாம், ஆயினும், எவ்வாறாயினும் அத்தகைய தகைமையுடைய பிணையங்கள், பதிலீட்டுத் திகதி அன்று உள்ளவாறு, குறைந்தது ஆரம்பத்தில் பதிலீடு செய்யப்பட்டுள்ள கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் சந்தைப் பெறுமதிக்கு சமமான சந்தைப் பெறுமதியினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதாகும். அத்தகைய பதிலீடானது அத்தகைய வேறு தகைமையுடைய பிணையங்கள் வாடிக்கையாளருக்கு மாற்றல் செய்யப்படுவதன் மூலம் அத்துடன் பதிலீடு செய்யப்படுகின்ற கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பில் சமமான தொடர்புடைய தொகை வணிகருக்கான சமகாலத்தில் மாற்றல் செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பதிலீடு செய்யப்பட்டதன் பின்னர் பதிலீடு செய்யப்பட்ட பிணையங்கள் கொள்வனவு செய்யப்பட்ட பிணையமாக இருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு பதிலீடு செய்யப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட மூல பிணையங்கள் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களாக இருப்பது முடிவுறுத்தப்படுதல் வேண்டும். வணிகர், அதற்கேற்றவாறு வாடிக்கையாளரின் மத்திய வைப்பக முறைமை கணக்கிற்கு பற்று வைப்பதற்கு அல்லது வரவு வைப்பதற்கு அத்துடன் அதற்கு ஏற்றவாறு கணக்கிலிருந்து மாற்றலொன்றைப் பெறுவதற்கு அல்லது கணக்கிற்கு மாற்றல் மேற்கொள்வதற்கு உரிமையுடையவராக இருத்தல் வேண்டும்.

7. தவணை தவறும் நிகழ்வு/ முடிவுறுத்தல் நிகழ்வு

(i) இவ் உடன்படிக்கையின் கீழ் தவணை தவறும் நிகழ்வை பின்வருவன தோற்றுவித்தல் வேண்டும்.

(அ) எவரேனும் தரப்பினர்கள் இதன் கீழான ஏதேனும் கொடுப்பனவினை செயலாற்றுவதற்கு அல்லது கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தவறுதல்;

(ஆ) இதன் கீழ் தரப்பினர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ஏவையேனும் பிரதிநிதித்துவங்கள் முக்கிய விடயம் தொடர்பில் பொய்யானதாக அல்லது தவறாக வழிநடாத்துவதாக இருத்தல்;

(இ) தரப்பினர் ஒருவர் தொடர்பில் கடன் தீர்க்க வகையற்ற செயற்பாடு

(ஈ) தனிப்பட்ட ஆளாக இருக்கின்ற வாடிக்கையாளர் ஒருவர் மரணித்தல் அல்லது உளநலம் குன்றியவராதல் அல்லது வேறு வகையில் வலுவற்றதாதல் அத்துடன் மரணம் சம்பவித்தல் தொடர்பில் வணிகருக்கான வாடிக்கையாளரின் செலுத்த வேண்டிய நிதிக் கடப்பாடுகள் இறப்புத் திகதியின் 30 நாட்களினுள் நிறைவேற்றப்படாமல் இருத்தல்

(ii) தவணை தவறும் தரப்பினர் அது பற்றி அறிவருகின்றவராக இருக்கின்ற போது ஏதேனும் தவணை தவறுதல் நிகழ்வு பற்றி தவணை தவறாத தரப்பினருக்கு அறிவிப்பதற்கு தவணை தவறும் தரப்பினர் கடப்பாடுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) ஏதேனும் தவணை தவறும் நிகழ்வு இடம்பெறுமாயின் மூன்று (03) நாட்களுக்கு குறையாத அறிவித்தல் வழங்குவதன் மூலம் தவணை தவறும் தரப்பினர் மீது தவணை தவறாத தரப்பினர் முடிவுறுத்தல் அறிவித்தல் ஒன்றை வழங்கலாம்.

(iv) தவணை தவறாத தரப்பினர் முடிவுறுத்தல் அறிவித்தல் ஒன்றினை வழங்குகின்ற விடத்து, இதன் கீழான ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலும் மீள்கொள்வனவுத் திகதி செலுத்த வேண்டிய திகதிக்கு துரிதப்படுத்தப்பட வேண்டும். (இதற்கான நியதிகளுக்கு அமைவாக முடிவுறுத்தல் அறிவித்தல் பெற்றுக்கொள்ளப்படுகின்றதாக கருதப்படுகின்ற திகதியாக இருத்தல் ஆகாது) ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலுமான மீள்கொள்வனவு விலையானது ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பில்தொடர்புடைய மீள்கொள்வனவுத் திகதியின் தீர்ப்பனவை கருத்தில் கொண்டு வணிகரினால் நல்லெண்ணத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு அமைவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும்(அத்தகைய திருத்தப்பட்ட மீள் கொள்வனவு விலை ‘‘திருத்தப்பட்ட மீள்கொள்வனவு விலை’’ ஆகும்).

(v) செலுத்த வேண்டிய திகதியொன்று அவ்வாறு நிகழ்கின்ற போது (அ) வணிகரானவர் (அ) இதன் கீழ் ஒவ்வொரு பிணையத்தினதும் சந்தை பெறுமதியினை அத்துடன் (ஆ)இதன் கீழ் திருத்தப்பட்ட மீள்கொள்வனவு விலையினை நிர்ணயித்தல் வேண்டும் மற்றும் (ஆ)கொடுப்பனவின் கீழான தரப்பினர்களின் கடப்பாடானது

(1) (அ) அனைத்து மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கலினதும் கீழ் திரண்ட சந்தைப் பெறுமதிகளின் மற்றும் (ஆ) அனைத்து நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் தருத்தப்பட்ட திரண்ட மீள்கொள்வனவு விலை (அத்தகைய தொகை, ‘‘வணிகர் தொகை’’)ஆகியவற்றின் மொத்தத் தொகைகள், (இ) அனைத்து நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களீன் கீழும் சந்தைப் பெறுமதிகளின் திரண்ட மற்றும் (ஈ) ஏதேனும் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் திருத்தப்பட்ட கொள்வனவு விலைகளின் திரண்ட மொத்தத் தொகையினை (அத்தகைய மொத்தத் தொகை ‘‘வாடிக்கையாளர் தொகைகள்’’)விஞ்சுகின்ற விடத்து,முடிவுறுத்தல் கொடுப்பனவுத் திகதியன்று அத்தகைய மேலதிகத் தொகைக்கு சமமான தொகையினை வணிகருக்கு கொடுப்பனவு செய்வதற்கு வாடிக்கையாளரின் பாகத்தின் மீதான (இதற்கான 7(iv) பிரிவுக்குட்பட்டு) கடப்பாடு ஒன்றின் மூலம், அத்துடன்

(2) வாடிக்கையாளர் தொகைகள் (7(v)(ஆ)(1) ஆம் பிரிவில் வரைவிலக்கனம் செய்யப்பட்டவாறு) வணிகர் தொகைகளை (7(vi)(ஆ)(1) பிரிவில் வரைவிலக்கனம் செய்யப்பட்டவாறு) விஞ்ஞுகின்றவிடத்துமுடிவுறுத்தல் திகதியன்று அத்தகைய மேலதிகத் தொகைக்கு சமமான தொகையினை வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு செய்வதற்கு வணிகரின் பாகத்தில் (இதற்கான 7(iv) ஆம் பிரிவிற்குட்பட்டு) வணிகரின் பாகத்தின் மீதான கடப்பாடொன்றின் மூலம்;

தன்னியக்கமாக மாற்றீடு செய்யப்படுதல் வேண்டும்.

(vi) வணிகருக்கு கிடைக்கத்தக்க வேறு கணக்குகளின் ஒன்றிணைத்தல், தேறச்செய்தல், அல்லது எதிரீடு செய்தல் உரிமைகளுக்கு ஏதேனும் மட்டுப்பாடுகளின்றி,ஒவ்வொரு விடயத்திலும் இவ் ஒப்பந்தத்தின் கீழ் அல்லது வேறு வகையில் தோன்றுகின்ற அத்தகைய ஏதேனும் வேறு தொகையாக இருக்கின்ற ஒவ்வொரு சந்தரப்பத்திலும் வணிகர் மூலம் வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு செய்யத்தக்க ஏதேனும் வேறு தொகைகளுக்கு எதிராக (அ)இதற்கான 7(v)(ஆ)(1) இன் கீழ் அதன் மூலம் வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு செய்யத்தக்க ஏதேனும் வேறு தொகைக்கு எதிராக அதற்கு கொடுப்பனவு செய்யத்தக்க மற்றும் (ஆ) வாடிக்கையாளரினால் வணிகருக்கு கொடுப்பனவு செய்யத்தக்க வேறு ஏதேனும் தொகைக்கு எதிராக(7(v)(ஆ)(2) பிரிவில் வரைவிலக்கனம் செய்யப்பட்டவாறு) அதன் மூலம் கொடுப்பனவு செய்யத்தக்க ஏதேனும் தொகையை எதிரீடு செய்யலாம்.

8 அறிவித்தல்கள்

அறிவித்தல்கள், மேலே குறித்துரைக்கப்பட்ட முகவரிக்கு அல்லது வணிகருக்கு வாடிக்கையாளரினால் எழுத்து மூலம் அறிவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு முகவரிக்கு வழங்கப்படும். என்பதுடன், (i) தொழில் நாளொன்றில் வணிகரின் தொழில் நேரங்களின் போது (''தொழில் நேரம்'') நேரடியாக ஒப்படைக்கப்படுமிடத்து, அத் தொழில் நாளன்று (அல்லது ஒப்படைப்புத் திகதி தொழில் நாள் அல்லதாயின் அல்லது ஒப்படைக்கும் நேரம் தொழில் நேரத்தினை தாண்டியதாயின் அடுத்து வருகின்ற தொழில் நாளின் தொழில் நேரத்தின் தொடக்கத்தில்) (ii) தொலை நகல் மூலம் ஒப்படைக்கப்படுமிடத்து, அனுப்பப்படும் ஏற்புடைய ஏற்றுக்கொள்ளல் கிடைக்கப்பெறும் தொழில் நாளன்று, (அல்லது தொழில் நாள் அல்லாத திகதியில், அல்லது ஒப்படைப்புத் திகதி தொழில் நேரத்தினை தாண்டி தொலைநகல் மூலம் ஒப்படைக்கப்படுமாயின், அடுத்துவருகின்ற தொழில் நாளன்று தொழில் நேரத்தின் தொடக்கத்தில்) அத்துடன் (iii) அஞ்சல் மூலம் ஒப்படைக்கப்படுமிடத்து அனுப்பிய திகதியினை தொடரந்துவருகின்ற இரண்டு தொழில் நாட்களில் வாடிக்கையாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருதப்படும்.

9 தாமதக் கொடுப்பனவுகள் மீதான வட்டி

ஏதேனும் கொடுக்கல் வாங்கலின் கீழ் அல்லது இவ்வுடன்படிக்கையின் கீழ் ஏதேனும் கொடுப்பனவை செலுத்த தரப்பினர் தவறுமிடத்து, அத்தகைய கொடுப்பனவிற்கான உரிய திகதி உள்ளடங்களாக அத்திகதியில் இருந்து ஆனால் ஏற்புடைய கொடுப்பனவானது அடுத்த தரப்பினரால் உண்மையாக பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி நீங்கலாக அத்திகதி வரையான காலப் பகுதிக்காக கொடுப்பனவு செய்யத்தக்க ஆனால் கொடுப்பனவு செய்யப்படாத தொகை மீது தவணை தவறிய வீதத்தில் தரப்பினரால் வட்டிக் கொடுப்பனவு செய்யத்தக்கதாகவிருத்தல் வேண்டும்.

10. கைமாற்றதகாமை

(i) மற்றைய தரப்பினரின் முன்கூட்டிய எழுத்திலான ஒப்புதலின்றி தரப்பினர்களில் எவரும் இவ்வுடன்படிக்கையின் கீழ் அதன் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் எதனையும் கைமாற்றவோ அல்லது சாட்டல் செய்யவோ அன்றில் அதன் உரிமைகளை எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு உருவாக்குவதற்கோ அதனை கோரலாகாது

(ii) கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்புடைய உறுதிப்படுத்தலில் வேறு வகையில் குறைத்துரைக்கபட்டாலன்றி கொள்வனவுத் திகதிக்கும் மீள்கொள்வனவுத் திகதிக்கும் இடையில் ஏதேனும் நேரத்தில் வர்த்தகப்படுத்தப்படலகாது.

11. வணிகரின் கடப்பாடுகள்/ எதிர்பாரா சூழ்நிலைகள்

(i) இதன் கீழ் வணிகரின் கடப்பாடுகள் வணிகரினால் மாத்திரம் செயலாற்றப்படக்கூடியவை ஆகும் என்பதுடன் அத்தகைய செயலாற்றுகையானது இலங்கையில் ஏற்புடைய அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதாகும்.

(ii) எதிர்பாராச் சூழ்நிலை அல்லது செயற்பாட்டின் காரணமாக இதன் கீழான அதன் கடமைகளை செயலாற்றுவதற்கு வணிகருக்கு சாத்தியமற்றதாக அல்லது நடைமுறையற்றதாகஉருவாகின்றவிடத்து அத்தகைய கடப்பாடுகளை செயலாற்றுவதற்கு வணிகருக்கு சாத்தியமாக அல்லது நடைமுறைக்கு ஏற்றதாக உள்ள வரை அத்தகைய கடப்பாடுகள் இடைநிறுத்தப்படல் வேண்டும், அத்துடன் வட்டி அல்லது வேறு கொடுப்பனவு எதுவும் (அத்தகைய இடைநிறுத்தல் இடம்பெற்றிராதிருந்து அத்தகைய கடப்பாடுகள் தொடர்பில் செலுத்தத்தக்கதாக இருக்கும் ஏதேனும் வட்டி அல்லது வேறு கொடுப்பனவு தவிர) இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் செலுத்தப்படலாகாது.

(iii) இடைநிறுத்தல் காலப்பகுதியன் போதான கடப்பாடுகள்; எதுஎவ்வாறிருப்பின் அத்தகைய சூழ்நிலைககளில் ஏதேனும் கழிப்பதில் அல்லது எதிரீடு செய்வதில் அத்தகைய கடப்பாடுகளின் பெறுமதியினை உள்ளடக்குவதற்கு வணிகரை இயலச் செய்வதற்கு அடுத்தத் தரப்பினர் தொடர்பில் தவணை தவறுதலின் அல்லது முடிவுறுத்தல் நிகழ்வின் மீது தொடர்புடைய கடப்பாடு செயலாற்றப்பட வேண்டியுள்ளதை வணிகர் பிரகனப்படுத்தலாம்.

12. ஆளுகின்ற சட்டம் மற்றும் நியாயாத்திற்கான சமர்ப்பனம்

இவ்வுடன்படிக்கையும் இதன் கீழ் பொறுப்பேற்கப்பட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இலங்கையின் சட்டங்களால் ஆளப்படுதல் வேண்டும் என்பதுடன் இலங்கையின் பிரத்தியேக நீதிமன்ற நியாயதிக்கத்திற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

இதற்குச் சான்றாக இவ் ஆவணத்தின் முதல் பக்கத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கீழே குறித்துரைக்கப்பட்ட தொடர்புடைய திகதிகள் அன்று இவ் ஆவணம் தரப்பினர்களால் நிறைவேற்றப்பட்டள்ளது.

**என்எஸ்பி பன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிடட்**

…………........…………………….  ……………………………………….

பெயர் : டி.எல்.பீ. அபயசிங்க  பெயர் : டி.டி.எஸ். சமரசிங்க

பதவி : பிரதம நிறைவேற்று அலுவலர்  பதவி : நிறைவேற்று அலுவலர்

திகதி:  திகதி :

**[*வாடிக்கையாளர் தனிப்பட்ட ஒருவராக இருக்கின்றவிடத்து*]**

கையொப்பம்(கையொப்பங்கள்): (1) …………………………………………….

(2)…………………………………………….

பெயர் : (1)  பெயர் : (2)

சாட்சி: (1)………………………………  (பெயர்)…………………………………….

சாட்சி: (2)………………………………  (பெயர்)…………………………………..

திகதி : ………………………

இதற்குச் சான்றாக கீழே குறித்துரைக்கப்பட்ட திகதிகள் திகதிகள் அன்று இவ் ஆவணம் தரப்பினர்களால் நிறைவேற்றப்பட்டள்ளது. இவ் உடன்படிக்கையானது கீழே இறுதியாக நிறைவேற்றப்பட்ட கையொப்பத்திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**[*வாடிக்கையாளர் கூட்டிணைக்கப்பட்டுள்ள விடத்து*]**

இதற்கான முத்திரையினை உறுதிப்படுத்துகின்ற )
பணிப்பாளரான ……………………………… )
மற்றும் பணிப்பாளரான ……………………… )
ஆகியோரின் முன்னிலையில் இடப்பட்ட )
முத்திரையில் பணிப்பாளர்கள் கையொப்பமிட்டு )
கொழும்பில் …………………………….லிமிடட் )
இன் பொதுவான முத்திரை இடப்பட்டது )

<u>சாட்சி</u>

1.

2.

அல்லது

……………………………………………….,இல்)
கம்பனியில் அதிகாரமளிக்கப்பட்ட ஒப்பதாரர்………………………… மூலம்) கையொப்பம்:
கையொப்பமிடப்பட்டது )

<u>சாட்சி</u>

1.

2.

**பின்னிணைப்பு 1**

வணிகரின் கடிதத் தலைப்பு

கடன் வழங்குனர் : வாடிக்யையாளரின் பெயர்

கடன் பெறுநர் : வணிகரின் பெயர்

திகதி :

விடயம் :கொடுக்கல்வாங்கல் தொடர்பு இலக்கம்

அன்புள்ள ஐயா,

இக்கடித்தின் நோக்கமானது (எங்களுக்கிடையில் முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கை நோக்கத்திற்காக"உறுதிப்படுத்தல்" ஒன்றை தோற்றுவிக்கின்ற **("உடன்படிக்கை")** கீழே குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தத் திகதியன்று கைச்சாத்திடப்பட்ட எங்களுக்கிடையிலான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கலின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை குறிப்பிடுவதற்கானதாகும்.

இவ் உறுதிப்படுத்தலானது உடன்படிக்கையினை குறைநிறப்புச் செய்வதுடன், அதன் பாகமொன்றினை தோற்றுவிக்கின்றது; கீழே வெளிப்படையாக மாற்றியமைக்கப்பட்டவாறானவை தவிர இவ் உறுதிப்படுத்தலை ஆளுகின்ற உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட அனைத்து ஏற்பாடுகளுக்கும் உட்பட்டதாகும்.

இவ் உடன்படிக்கையில் வரைவிலக்கனம் செய்யப்பட்ட மற்றும் உறுதிப்படுத்தலில் பயன்படுத்தப்பட்ட சொற்பதங்களும் சொற்தொடர்களும் உடன்படிக்யையில் உள்ளதைப் போன்ற இங்குள்ள அதே பொருளினை கொண்டிருத்தல் வேண்டும். இவ் உறுதிப்படுத்தல் மூலம் சான்றளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கால் லங்காசெக்கியோ மத்திய வைப்பக முறைமையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இவ் உறுதிப்படுத்தலின் மூலம் சான்றளிக்கப்பட்ட கொடுக்கலவாங்கல் லங்காசெக்கியோ மத்திய வைப்பக முறைமை மீது பதிவு செய்யப்படவேண்டும்.

1. ஒப்பந்தத் திகதி :
2. கொடுக்கல்வாங்கலின் தன்மை : (மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்) (நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்)
3. கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் :
   *(விபரங்கள் + ISIN போன்ற இலக்கங்கள்)*

5. கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் சந்தைப் பெறுமதி:

6. கொள்வனவு திகதி பெறுமதித் திகதி:

7. கொள்வனவு விலை / வட்டி வீதம்:

8. மீள்கொள்வனவுத் திகதி / முதிர்வுத் திகதி:

9. மீள்கொள்வனவு விலை /வட்டி வீதம்:

10. பிணையங்களின் பதிலீடு அனுமதிக்கப்பட்டது (ஆம்/இல்லை) :

11. பிணையங்கள் நிறைவாக்கம் அனுமதிக்கப்பட்டது (ஆம்/இல்லை) :

12. பிணையங்கள் அகற்றல் அனுமதிக்கப்பட்டது (ஆம்/இல்லை) :

13. பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் அனுமதிக்கப்பட்டது (ஆம்/இல்லை) :

13. மேலதிக நியதிகள்

(I) ஏதேனும் பிணையங்களின் சந்தைப் பெறுமதி நிர்ணயிக்கப்பட வேண்டியவிடத்து அது தரப்பினர்கள் மூலம் பரஸ்பரம் இனங்கப்பட்ட வீதங்களை, அவ்வாறு செய்யத்தவறுகையில் தொடர்பான பிணையங்களுக்காக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வீதங்களை அடிப்படையாக கொண்டிருத்தல் வேண்டும்.

(II) முதிர்வுப் பெறுகைகள் / வட்டி, இவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட காசு கணக்கிற்கு அல்லது எழுத்து மூலம் எமக்கு முறையாக அறிவிக்கப்பட்ட அல்லது ஏதேனும் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

14 உறுதிப்படுத்தல் பிழைகள் :இவ் உறுதிப்படுத்தலில் ஏதேனும் பிழைகள் பற்றி இவ் உறுதிப்படுத்தல் கிடைக்கப்பெற்ற 2 நாட்களினுள் எமக்கு அறிவித்தல் வேண்டும்.

எமது தொலைநகல் இலக்கம் எமது டெலக்ஸ் இலக்கம்

ஆவணம் தொடர்பான தெளிவுபடுத்தல்களுக்கான எமது தொலைபேசி இலக்கம்

இப்படிக்கு

…………….

(வணிகரின் பெயர்)

இற்காகவும் சார்பாகவும்.